# <u>கீழக்கரை நகர்மன்ற 29.10.2021–ம் தேதிய கூட்டத்தின் நடவடிக்கைகள்</u>

## <u>பொருள் :1</u>

மாண்புமிகு நகராட்சி நிர்வாகத்துறை அமைச்சர் அவர்களால் 2021-22-ம் ஆண்டு தமிழ்நாடு சட்டமன்ற பேரவை கூட்டத்தொடரில் நகராட்சி நிர்வாக துறை மாநில கோரிக்கையின் போது, தமிழ்நாடு சட்டமன்ற அறிவிப்பினைத் தொடர்ந்து, சென்னை நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களின் கடிதம் ந.க.எண்.20543/2021/பி2, நாள். 07.10.2021-ல் தெரிவித்துள்ளதற்கிணங்க, கலைஞர் நகர்ப்புற மேம்பாட்டுத்திட்டம் (KNMT) 2021-22 - ன் கீழ் கீழக்கரை நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் பூங்¦காக்களை மேம்பாட்டு செய்யும் பணிக்கு திட்ட மதிப்பீடு ரூ.30.00 லட்சத்திற்கு மேற்கொள்ள அனுமதிக்கப்பட்டுள்ளது.

அதனைத் தொடர்ந்து கீழக்கரை நகராட்சி வார்டு எண்.16 புல எண்.230/ A1 மற்றும் வார்டு எண்.20 புல எண்.310/1A3/1B3- பூங்காக்களில் நடைபாதை மற¦றும் சுற்றுச்சுவர் அமைக்கும் பணிக்கு தமிழ்நாடு நகர்ப்புற உட்கட்டமைப்பு நிதி மேலாண்மை நிறுவனம் (TUFIDCO) சென்னையால் மதிப்பீடு செய்யப்பட்ட (APPRAISAL) திட்ட மதிப்பீடு ரூ.30.00 லட்சத்திற்கு பணி மேற்கொள்ள இராமநாதபுரம் மாவட்ட ஆட்சியர் அவர்களால் ந.க.எண்.ஜி4, 49718/2021, நாள்.23.102021 ன்படி கருத்துரு பரிந்துரை செய்யப்பட்டுள்ளது. அதனை தொடர்ந்து கலைஞர் நகர்ப்புற மேம்பாட்டுத் திட்டம் **(KNMT)** 2021/22-ன் கீழ், கீழக்கரை நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் அமைந்துள்ள கீழ்காணும் பூங்காக்களை மேம்பாடு செய்யும் பணிக்கு, அரசாணை (MS) எண். 90, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (NS) துறை நாள். 27.10.2021ன்படி நிர்வாக அனுமதி வழங்கி உத்திரவிடப்பட்டுள்ளது மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

| வ. எண். | வேலையின் விபரம் | மதிப்பீடு (ரூ. இலட்சத்தில்) |
|---|---|---|
| 1. | கீழக்கரை நகராட்சி வார்டு எண்.16 புல எண்.230.A1 தாய் கார்டனில் நடைபாதை மற்றும் சுற்றுச்சுவர் அமைக்கும் பணி | **16.50** |
| 2. | கீழக்கரை நகராட்சி வார்டு எண்.20 புல எண்.310/1A3/1B3 ரூபி கார்டனில் நடைபாதை மற்றும் சுற்றுச்சுவர் அமைக்கும் பணி | **13.50** |

**(கோப்பு எண்.613/2021/இ1)**)

**<u>அலுவலக்குறிப்பு</u>**

மன்றம் பார்வையிட்டு பதிவு செய்யலாம்.

**<u>தீர்மானம் எண்.908 அனுமதிக்கப்பட்டது.</u>**

**பொருள் :2**

கீழக்கரை நகராட்சிக்குட்பட்ட 21 வார்டுகளில் அமைந்துள்ள தெருமின் விளக்குகளான குழல் விளக்கு, சோடியம் ஆவி விளக்கு, CFL விளக்குகள் மற்றும் LED விளக்குகளில் ஏற்படும் பழுதுகளை பழுது நீக்கம் செய்து நல்ல முறையில் எரிய வைப்பதற்கு தேவையான தெருமின் விளக்கு பராமரிப்பு பொருட்கள் 2021-2022 ஆம் ஆண்டுக்கு வாங்கித் தருமாறு இந்நகராட்சி மின்பணியாளரால் கோரப்பட்டுள்ளது. ஆகவே, இந்நகர் பொதுமக்களின் நலன் கருதி தெருமின் விளக்கு பராமரிப்பு பொருட்கள் 2021-2022 ஆம் ஆண்டிற்கு வாங்குவதற்குரிய ஒப்பந்தப்புள்ளி நடவடிக்கை மேற்கொள்ளும் பொருட்டு இந்நகராட்சிப் பொறியாளர்களால் ரூ. 9,75,000/-க்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. மேலும் இச்செலவினத்தை இந்நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளும் பொருட்டு அனுமதி கோரப்பட்டுள்ளது மன்றத்தின் ஒப்புதலுக்கு முன் வைக்கப்படுகிறது.

**(கோப்பு எண்.704/2021/இ1)**

**அலுவலகக்குறிப்பு**

1) இந்நகர் பொதுமக்கள் நலன்கருதியும், தெருவிளக்கு பராமரிப்பு பணியின் அவசியத்தை கருத்தில் கொண்டும் பொறியாளர்களால் தயார் செய்யப்பட்ட மதிப்பீடு ரூ.9,75,000/-ஐ மன்றம் அங்கீகரிக்கலாம்.
2) இந்நகராட்சி வருவாய் நிதியிலிருந்து செலவினங்கள் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மானம் எண்.909அனுமதிக்கப்பட்டது.**

**பொருள் :3**

கீழக்கரை நகராட்சியில் ஒப்பந்ததாரராக பதிவு செய்ய வேண்டி கதவு எண்.1/93, வடக்கு ரத வீதி, திரு. உத்தரகோசமங்கை, கீழக்கரை தாலுகா, இராமநாதபுரம் மாவட்டம் என்ற முகவரியில் உள்ள திரு.எம். நடராஜன் என்பவர் கொடுத்துள்ள விண்ணப்பத்தின்படி, அன்னாரை இந்நகராட்சி ஒப்பந்ததாரராக ரூ. 6.00 இலட்சம் வரையிலான பணிகள் எடுத்து செய்வதற்கும், ஒப்பந்ததாரர் வகுப்பு ஐந்தில் பதிவு செய்வதற்கும், இந்நகராட்சிப் பொறியாளரால் பரிந்துரை செய்யப்பட்டுள்ளது. அதனடிப்படையில் மேற்காணும் ஒப்பந்ததாரர் மூலம் இந்நகராட்சி சேவை மைய பற்றுச் சீட்டு எண். 133/K1/2/21-22/0003732, எண்.06.10.2021ன்படி பதிவு கட்டணம் ரூ.1000+ரூ.10000 செலுத்தப்பட்டுள்ளது மன்றத்தின் தகவலுக்கு முன் வைக்கப்படுகிறது.

**(கோப்பு எண்.343/2021/இ1)**

**<u>அலுவலகக்குறிப்பு</u>**

மன்றம் பதிவு செய்யலாம்

**<u>தீர்மானம் எண்.910 அனுமதிக்கப்பட்டது.</u>**

## <u>பொருள் :4</u>

அரசாணை (நிலை) எண்.79, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (மா.ந.2) துறை, நாள்.31.05.2013 மற்றும் அரசாணை (நிலை) எண்.118, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (மா.ந.2) துறை, நாள்.26.09.2014–ல் தெரிவித்துள்ளதன்படி, இந்நகராட்சி அம்மா உணவகங்களுக்குத் தேவைப்படும் காய்கறி வகைகளை அன்றாடம் வெளிச்சந்தை விலையில் 01.11.2021 முதல் 30.04.2022 வரை ஆறு மாதங்களுக்கு மட்டும் விநியோகம் செய்வதற்கு இவ்வலுவலக ந.க.எண். 187/ இ1/2020 நாள். 05.10.2021-ன்படி விலைப்புள்ளி கோரப்பட்டதில் 20.10.2021ந் தேதி கீழ்காணும் விவரப்படி மூன்று விலைப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளது. அதன்படி ஒப்புநோக்கு பட்டியல் தயார் செய்யப்பட்டு இந்நகராட்சி பொறுப்பு அலுவலரால் (Nodal Officer) பரிந்துரை செய்யப்பட்டுள்ளது மன்றத்தின் பரிசீலனைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண் | பொருட்கள் விபரம் | விலை விகிதம் | எம்.எஸ். ஜகுபர் சாதிக், எஸ்.எம். காய்கறி கடை, 6/12, 6.19 இந்து பஜார் கீழக்கரை | எம். ஜாஹிர் உசேன், காய்கறி வியாபாரம், இந்து பஜார், கீழக்கரை | ஏ.ஜி.காய்கறி கடை, எண்.3 புதிய பேருந்து நிலையம், கீழக்கரை. |
|---|---|---|---|---|---|
| 1 | வெள்ளைப் பூசணிக்காய் / முள்ளாங்கி | (கிலோ ஒன்றுக்கு) | 68 | 70 | 72 |
| 2 | சின்னவெங்காயம் | (கிலோ ஒன்றுக்கு) | 70 | 72 | 74 |
| 3 | பெரிய வெங்காயம் | (கிலோ ஒன்றுக்கு) | 70 | 72 | 74 |
| 4 | தக்காளி | (கிலோ ஒன்றுக்கு) | 70 | 72 | 74 |
| 5 | கேரட் | (கிலோ ஒன்றுக்கு) | 80 | 83 | 85 |
| 6 | கத்திரிக்காய் | (கிலோ ஒன்றுக்கு) | 70 | 72 | 74 |
| 7 | உருளை கிழங்கு | (கிலோ ஒன்றுக்கு) | 65 | 67 | 70 |
| 8 | பீன்ஸ் | (கிலோ ஒன்றுக்கு) | 100 | 102 | 105 |
| 9 | கருவேப்பிலை,மல்லி | (கிலோ ஒன்றுக்கு) | 100 | 102 | 105 |
| 10 | பச்சைமிளகாய் | (கிலோ ஒன்றுக்கு) | 96 | 98 | 100 |
| 11 | இஞ்சி | (கிலோ ஒன்றுக்கு) | 100 | 102 | 105 |
| மொத்தம் | | | 889 | 912 | 938 |

**(கோப்பு எண். 187 /2020/இ1)**

**<u>அலுவலக குறிப்பு</u>**

1. மேற்கண்ட விலைப்புள்ளிகளில் வ.எண்.1 முதல் 11 வரையிலான ஒட்டு மொத்த இனங்களுக்கு குறைந்த விலைப்புள்ளி கொடுத்துள்ள எஸ்.எம்.ஜகுபர் சாதிக், எஸ்.எம். காய்கறி கடை, கீழக்கரை விலைப் புள்ளியை மன்றம் அனுமதிக்கலாம்.
2. இந்நகராட்சி அம்மா உணவகத்திற்குத் தேவையான காய்கறி வகைகளை 01.11.2021 முதல் 30.04.2021 வரை ஆறு மாதங்களுக்கு மேற்கண்ட விலை விகிதத்தில் விநியோகம் செய்வதற்கு மன்றம் அனுமதிக்கலாம்.
3. இந்நகராட்சி வருவாய் நிதியிலிருந்து செலவினங்களை மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

**<u>தீர்மானம் எண்.911 அனுமதிக்கப்பட்டது.</u>**

**ஒம்/—ப. சதீஷ்குமார்,**
**தனி அலுவலர் / ஆணையாளர்**
**கீழக்கரை நகராட்சி.**

**/ உண்மை நகல் /**

**ஆணையாளர்**
**கீழக்கரை நகராட்சி.**